அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 07/2020(III)

எனது இலக்கம்: EST-06/04/LOANS/4072
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திரசதுக்கம்
கொழும்பு 07

2020.06.10

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**புதிய கொரோனா வைரஸ் காரணமாக, எழுந்துள்ள நிலைமையைக் கருத்திற் கொண்டு அரச உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் வழங்குதல்**

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2020.03.26 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 07/2020 மற்றும் 2020.04.04 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 07/2020(II) இன் பேரில் அவதானத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

02. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 07/2020(II)இன் பிரிவு 02ற்கு அமைய சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் வருடாந்த வரவுசெலவு மதிப்பீடுகளின் IIஆம் பகுதியின் முற்பணக்கணக்குகளில், "அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணம்" என்னும் தலைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள கடன்களின் பொருட்டு அவர்களது சம்பளத்தில் அறவிடப்பட வேண்டிய கடன் தவணைப்பணம் மற்றும் கடன் வட்டி அறவீடுகளை மீள அறியத்தரும் வரையில் இடைநிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம், 2020 ஜூன் மாதச் சம்பளத்தலிருந்து பொருத்தமற்றது என்பதுடன், முன்னர் போல் அக்கடன் தவணைப் பணத்தையும் மற்றும் வட்டியையும் உரிய உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்படல் வேண்டும்.

03. இச்சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு